සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**දෙවන වාර පරීක්ෂණය 2018** **11 ශ්‍රේණිය**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2018** **தரம்11**
**Second Term Test 2018** **Grade 11**

**දෙමළ සාහිත්‍යය**
**தமிழ் இலக்கிய நயம்**
**Tamil Literature**

**පැය තුනයි**
**மூன்று மணித்தியாலம்**
***Three hours***

- ***பகுதி I இல் 1 , 2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இலுள்ள 3ஆம் வினாவிற்கும் பகுதி III இலுள்ள 4 , 5 , 6 , 7 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் (எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு ) விடை தருக.***

**பகுதி – I**

1. (I) தொடக்கம் (V) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தத

(I) “அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்
திலகம் கண்டு எதிர் செஞ்சிலை மாரனும்”
(அ) இதிலுள்ள அழகினை குறிப்பிட்டு விளக்குக.
(ஆ) செஞ்சிலை மாரன் எனப்படுவது யாரை?

(II) “ ஒரு நாளைக்கு இதுவே ஒரு படி பாலைக்குடிச்சிடும் போல இருக்கு”
(அ) இதுயாரால் யாருக்கு கூறப்பட்டது
(ஆ) இவருடைய ஏனைய படைப்புக்கள் 2 தருக

(III) “ஆறலை கள்வர் படை விட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை”
(அ) இப்பாடலடி இடம்பெற்ற நூல் யாது?
(ஆ) இப்பாடலடி மூலம் உணர்த்தப்படுவது யாது?

(IV) “ மைத்துனர் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழிநான்”
(அ) மதுசூதனன் என்னும் பெயர் பூண்டவர் யார் ?
(ஆ) தலைவி கண்ட கனவு யாது?

(V) தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று
(அ) இக்குறட்பாவின் பொருளினை எழுதுக.
(ஆ) இக்குறட்பா இடம் பெற்ற பாடற் பகுதி எது?

2. கீழ்காணும் பாடற்பகுதியை / உரைநடையை வாசித்து தரப்பட்ட வினாக்களக்கு விடை எழுதக.

வேப்பம் பூ மிதக்கும்
ஏங்கள் வீட்டு கிணற்றில்
தூர்வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விஷேசமாய் நடக்கும்
ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்

கொட்டாங் கச்சி கோலி
கரண்டி
கட்டையோடு உள் விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்லர்
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே

பகை வென்ற வீரனாய்
தலை நீர் சொட்டச் சொட்டச்
அப்பா மேல் வருவார்

இன்று வரை அம்மா
கதவுகளின் பின்னிருந்து தான்
அப்பாவோடு பேசகிறாள்
கடைசிவரை அப்பாவும்
மறந்து போனார்
மனசுக்குள் தூரெடுக்க

1. தூர் வாருதல் அல்லது தூர் எடுத்தல் என்றால் என்ன?
2. வேலைக்காரி திருடியதாய் சந்தேகப்பட்ட வெள்ளி டம்லர் என்பதன் ஊடாக வேலைக்காரி பற்றிய விம்பம் தகர்க்கபடுமாற்றினை தெளிவுறுத்துக.
3. தூர் வாரும் நிகழ்ச்சியை உற்சவம் என்று விபரித்தல் பொதிந்துள்ள கருத்துக்களை தெரிவு படுத்துக.
4. பொருள் தருக.

   கோலி , கிளறி , தூர்எடுத்தல் , முங்க , முங்க , அதிசயங்கள்
5. இக் கவிதையின் இறுதி வரிகள் உமக்கு ஏற்படுத்தும் உணர்வினை விளக்குக.

அல்லது

3. மூச்சிறைக்க தள்ளாடிக் கொண்டே முன்னால் நின்றாள். மைமூன் கிழவி வறுமைத் தூரிகை வரைந்த கோலங்கள் , முதுமை முகத்தில் சோகங்களாய் முட்டித் தெறித்தன ஏண்ட மகள் சரீனா சவுதி பெயித்து மூன்று மாசமாவுது. மகன்! சல்லியுமில்லை. காகிதமுமில்ல பச்சப்புள்ள மூண்ட ஏண்ட தலேல பாரம் சாட்டிட்டு பெய்திட்டா! இவ்வளவு நாளும் சமது கடையில். அவள் அனுப்பினா தார எண்டு , சாமான் கடனுக்கு வேங்கின. இப்ப அவள் தார இல்ல. மகனட நேத்து ராவையில் இருந்து ல்லாம் பட்டினி. நூன் என்னத்த செய்ய ? இந்த கண் கூடத் தெரியாத கெழவியை அல்லா சோதிக்கியான் போன புள்ளகி , என்னத்த நடந்ததோ? அவளட்ட ஒரு தாக்கல் அழப்பிக்கப் பாரு மகள்!

I. இவ்வுரைப்பகுதி இடம்பெறும் சிறுகதை எது? அதன் ஆசிரியர் யார்?
II. மைமூன் கிழவியின் தோற்றம் எவ்வாறு விபரிக்கப்படுகிறது?
III. இவ்வுரைப்பகுதியின் வறுமையின் கொடுமை எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது?
IV. பின்வரும் பேச்சு வழக்கு தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
“ஏண்ட மகளட சரீனா சவுதி பெயித்து மூன்று மாசமாவுது மகன்! சல்லியுமில்ல காகிதமுமில்ல பச்சப்புள்ள மூண்ட ஏண்ட தலேல பாரம் சாட்டிட்டு பெய்திட்டா
V. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக்?
1. வறுமை   2. முகம்   3. சோகம்   4. காகிதம்

(5 x 5 = 25 )

பகுதி – III

4. அமுதம் கவிதையில் மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறெல்லாம் புகழ்கிறான்?

5. 1. கார் நாற்பது பாடலில் கதாநாயகியின் அழகு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது
   2. தமயந்தியின் காதலை புகழேந்திப் புலவர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

6. தெளிவு என்ற சிறு கதையில் கிராமம் பற்றி விபிரிப்பின் சிறப்பினை விளக்குக.

7. ‘‘தாய்ப்பசு’’ என்ற அகிலனின் சிறுகதை ஜீவகாருண்யத்தின் தேவையை வலியுறுத்துகிறது ஆராய்க.